# அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்த்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

<u>அமைவிடம்</u>

சென்னை மாநகரில் வன்னியத் தேனாம்பேட்டை, எல்டாம்ஸ் சாலையில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. சென்னை அண்ணா சாலையில் தியாகராயர் சாலை எல்டாம்ஸ் சாலை சந்திப்பிலிருந்து சுமார் 150 அடி தூரத்திலேயே இத்திருக்கோயில் அமையப் பெற்றுள்ளது. மாம்பலம் புகைவண்டி நிலையத்திலிருந்து 4 கி.மீ தூரத்தில் உள்ளது.

<u>தல சிறப்புசிறப்பு</u>

இத்திருக்கோயில் தற்போது பாலசுப்பிரமணியசுவாமி கோயில் என்று அழைக்கப்பட்டாலும் உண்மையிலேயே இது ஒரு சிவத்தலம் ஆகும். இவ்வாலயத்திற்கு சொந்தமாக உள்ள நிலங்கள் அருள்மிகு இராமலிங்கேஸ்வரர் திருக்கோயில் என்ற பெயரிலேயே உள்ளன. மேலும் இத்திருக்கோயிலின் விநாயகர் சன்னதிக்கு எதிரே உள்ள தெரு இராமலிங்கேஸ்வரர் தெரு என்று தான் இன்று வரை அழைக்கப்படுகின்றது. மேலும், இங்கு உள்ள விநாயகர் சன்னதி,

ஈஸ்வரன் சன்னதி , அம்பாள் சன்னதி, நடராஜர் சன்னதி, சுப்ரமணியர் சன்னதி ஆகியவை இது ஒரு சிவன் கோயிலாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது. இத்திருக்கோயில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது ஆகும். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு பாலசுப்பிரமணியர் சன்னதி நிர்மாணிக்கப்பட்டு புதிய ராஜகோபுரம் அமைக்கப்பட்டு அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் என்று மக்களால் அழைக்கப்பட்டு தற்போதும் இந்த பெயரிலேயே இருந்து வருகிறது. நவகிரக சன்னதி, சனீஸ்வரர் சன்னதி, துர்க்கை சன்னதி ஆகியவை உள்ளன. அருள்மிகு சுப்ரமணியர் வள்ளி தெய்வயானையுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார். தென் சென்னையில் உள்ள முருகன் திருத்தலங்களில் இது முக்கியமான திருத்தலமாகும்.

<u>பிராத்தனை சிறப்பு</u>

திருமணம் ஆகாதவர்கள் திருக்கோவிலுக்கு வந்து முருகப்பெருமானை தரிசித்து சென்றால் விரைவில் திருமணம் நடக்கும், என்பதும், பிரதோஷ சமயங்களில் சிவனை இத்திருத்தலத்தில் வந்து அபிஷேகம் மற்றும் புறப்பாட்டில் கலந்து கொண்டால் தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிட்டும் என்பது இத்திருக்கோயிலின் சிறப்பு அம்சமாகும்.